**தலைப்பு 101 – புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 101 - புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 ஆகஸ்ட் 07 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 செப்தெம்பர் 24 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில்

உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட கீழே காட்டப்பட்ட பரிந்துரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய ஆண்டிற்குரிய அறிக்கையின் பந்தி தொடர்பு | அமுல்படுத்தப்படாத பரிந்துரை | இந்த அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|
| 1.6.1. (ஆ) (i) | கலாசார பிரிவிற்கு சொந்தமான 03 வாகனங்கள் நிதிக்கூற்றுக்களில் வாகனங்களில் பெறுமதிக்கு உள்ளடக்கப்படாமை காரணமாக அந்த அளவில் நிதியல்லாத சொத்துக்கள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன. | 1.6.1.(ஆ) |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) மீண்டெழும் செலவினம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2023 பாதிட்டு மதிப்பீட்டின் பிரகாரம் 01 ஆம் இலக்க நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய மீண்டெழும் செலவினத்தின் மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு | கலாசார மற்றும் தேசிய மரபுரிமை பிரிவுகளுக்கு இடையே நிதி ஏற்பாடு மாற்றல் தேசிய மரபுரிமை பிரிவினால் | சரியான தரவுகளை உள்ளடக்கி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 553,000,000 ஆக இருந்த போதும் நிதிக் கூற்றுகளில் நிகழ்ச்சிகளின் பிரகாரம் செலவின பொழிப்பில் (ஏசிஏ-2) மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா 553,344,600 என ரூபா 344,660 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | நி.பி 66 இன் பிரகாரம் மாற்றப்பட்டதாக பதிவு செய்தல் மற்றும் அதனை அவ்வாறே இறுதி நிதி அறிக்கையிலும் பதிவு செய்யப்பட்டமை இதற்கு காரணமாக இருந்ததாகவும் எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது குறைபாடுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | |
| (ii) | 101-1-03 இன் 1201 மற்றும் 1,401 செலவின விடயங்களின் கீழ் முறையே ரூபா 100,000 மற்றும் ரூபா 800,000 மற்றும் ரூபா 555,400 தொகை நி.பி 66 மாற்றமாக நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ 2 ஏசீஏ 2(i) மற்றும் ஏசீஏ 2(ii) இல் காண்பிக்கப்பட்டிருந்த போதும் நி.பி 66 இன் கீழ் அவ்வாறான மாற்றங்கள் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் தேசிய மரபுரிமை பிரிவின் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டமை மற்றும் கலாசார பிரிவுக்கு நிதி ஏற்பாடு போதாமல் போனமை அடிப்படையில் அந்த செலவினை விடயங்களுக்கு உள்ளக நிதி ஏற்பாடு மாற்றப்பட்டமை இடம்பெற்றதாகவும் அதன் பிரகாரம் இது செலவின விடய இலக்கங்களுக்கு இடையே பரிமாற்றம் அல்லாததால் நி.பி 66 இன் கீழ் அதிகார ம் தேவைப்படவில்லை என்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | சரியான தரவுகளை உள்ளடக்கி நிதி கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும் |
| (iii) | Cigas டெஸ்க்டொப் உள்ளீட்டின் மூலம் உருவாக்கப்பட்ட பரீட்சை மீதி மற்றும் Cigaś இணைய உள்ளிட்டு முறைமை மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட பரீட்சை மீதியின் பிரகாரம் அமைச்சுக்காக ஏனைய நிறுவனங்களால் | அமைச்சினால் 2023 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் நிகழ்ச்சிகளின் பிரகாரம் செலவின கூற்று ஏசீஏ-2(i) இன் நி.பி 208 இன் கீழ் ஏனைய அமைச்சுக்கள் / | சரியான தரவுகளை உள்ளடக்கி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | செலவிடப்பட்ட செலவினம் ரூபா 355,187,750 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுகளில் ரூபா 355,243,510 என ரூபா 55,760 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | திணைக்களங்கள் செலவிடப்பட்ட செலவினத்திற்கு கீழ் எடுக்கப்படாத ரூபா 55,760 பதிவு செய்யப்பட்டமை இதற்கான காரணங்களாக இருப்பதால் எதிர்வரும் ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இவ்வாறான குறைபாடுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| (iv) | தேசிய மரபுரிமைகள் பிரிவினால் செலவிடப்பட்ட செலவினங்கள் செலவின பேரேட்டில் பதிவு செய்யாமை காரணமாக தேசிய மரபுரிமைகள் பிரிவின் மீதிகள் பரீட்சை மீதியில் அச்செலவினங்கள் பதிவு செய்யப்படாத போதும் திறைசேரியின் அச்சிட்டு குறிப்புக்களில் அச்செலவினம் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் தேசிய மரபுரிமை பிரிவின் பரீட்சை மீதி மற்றும் திறைச்சேரி மீதிகள் நிலுவைக்கு இடையே வேறுபாடு நிதிக்கூற்றுகளில் ஏசீஏ-2(i)இல் நி.பி 208 கீழ் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களால் செலவிடப்பட்ட சதவீதமாக பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அப்பெறுமதி ரூபா 106,900,759 ஆக இருந்தது. | தேசிய மரபுரிமைகள் பிரிவின் கீழ் கூட்டிணைப்பு நிறுவனத்தின் வழமையான நிர்வாக நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு திறைசேரியிடமிருந்து விடுவித்தல் மற்றும் அந்நிதி ஏற்பாட்டின் கீழ் மாதாந்த செலவினம் செலவிடப்பட்ட விதம் தொடர்பான தகவல்கள் தேசிய மரபுரிமை பிரிவிற்கு தொடர்புபடாததால் அச்செலவின பேரேட்டில் பதிவு செய்யப்படவில்லை. எனினும் அந்நிறுவனம் நேரடியாக திறை சேரிக்கு அனுப்பி வைத்த தரவுகளின் பிரகாரம் செலவினம் உள்ளடக்கப்பட்டதால் நிதிக்கூற்றுகளில் மற்றும் செலவின பேரேட்டின் செலவினம் தொடர்பான வேறுபாடு வேறுபாட்டை காண்பிப்பதற்கு காரணமாக இருந்ததால் 2024 ஆம் ஆண்டின் | அமைச்சிக்காக வேறு அமைச்சு நிறுவனங்களால் செலவிடப்படும் செலவினங்களும் வாக்குப்பண பேரேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | போது திறைசேரி தகவல்கள் மற்றும் தேசிய மரபுரிமைகள் பிரிவின் தரவுகள் சமமாக உள்ளடக்கப்படுவதற்காக பொருத்தமான வேலை திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கு குறித்துக் கொண்டுள்ளதாக அறியத் தருகிறேன். | |
| (v) | தேசிய மரபுரிமை பிரிவினால் பேணி செல்லப்படுகின்ற செலவினப் பெயரிட்டின் 2 ஆவது நிகழ்ச்சி திட்டத்தின் 9 ஆம் கருத்திட்டத்திற்குரிய 05 செலவின விடயங்களில் சேமிப்பு ரூபா 27,808,451 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதும் அது நிதிக் கூற்றுகளில் ஏசீஏ(i) இல் ரூபா 37,871,240 ஆக ரூபா 10,062,789 கூடுதலாகவும் 2 மீண்டெழும் செலவினை விடயங்களின் சேமிப்புக்கள் ரூபா 22,693,425 என செலவினப் பேரேட்டில் காண்பிக்கப்பட்டிருந்த போதும் அது நிதிக்கூற்றுகளில் ஏசீஏ 2(ii) இல் ரூபா 13,982,922 என ரூபா 8,710,503 குறைவாகவும் ஒரு மூலதன செலவின விடயத்திற்குரிய சேமிப்பு ரூபா 10,992,468 என செலவின பேரேட்டில் காண்பிக்கப்பட்டிருந்த போதும் அது நிதிக்கூற்றுகளில் ஏசீஏ-2(ii) ரூபா 2,992,469 என ரூபா 7,999,999 குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | தேசிய மரபுரிமை பிரிவினால் பேணி செல்லப்படுகின்ற செலவினப் பெயரிட்டின் 2 ஆவது நிகழ்ச்சி திட்டத்தின் 9 ஆம் கருத்திட்டத்திற்குரிய 05 செலவின விடயங்களில் சேமிப்பு ரூபா 27,808,451 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதும் அது நிதிக் கூற்றுகளில் ஏசீஏ(i) இல் ரூபா 37,871,240 ஆக ரூபா 10,062,789 கூடுதலாகவும் 2 மீண்டெழும் செலவினை விடயங்களின் சேமிப்புக்கள் ரூபா 22,693,425 என செலவினப் பேரேட்டில் காண்பிக்கப்பட்டிருந்த போதும் அது நிதிக்கூற்றுகளில் ஏசீஏ 2(ii) இல் ரூபா 13,982,922 என ரூபா 8,710,503 குறைவாகவும் ஒரு மூலதன செலவின விடயத்திற்குரிய சேமிப்பு ரூபா 10,992,468 என செலவின பேரேட்டில் காண்பிக்கப்பட்டிருந்த போதும் அது நிதிக்கூற்றுகளில் ஏசீஏ-2(ii) ரூபா 2,992,469 என ரூபா 7,999,999 குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான தகவல்கள் உள்ளடக்கி நிதி கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும் |

(ஆ) **ஆதனங்கள்,பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| அமைச்சின் பேரில் பதிவு செய்யப்பட்டிருந்த 02 வாகனங்களின் பெறுமதி நிதிக்கூற்றுகளில் நிதி அல்லா சொத்துக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை. | குறித்த 02 வாகனங்களை பயன்படுத்துவதற்கு முடியாத நிலைமையில் காணப்படுவதுடன் திருத்தம் செய்து மதிப்பீடு செய்ததன் பின்னர் நிதி அல்லா சொத்துக்களாக கணக்கீடு செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | அமைச்சுக்குரிய அனைத்து நிதி அல்லாத சொத்துக்களும் நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட வேண்டும் |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) மீண்டெமும் செலவினங்கள் மற்றும் 06 மூலதன விடயங்களுக்காக நிதி ஏற்பாடு ரூபா 109,563,657 ஆன நிதி ஏற்பாட்டில் ரூபா 89,064,964 சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது அச்சேமிப்பு 76 சதவீதம் முதல் 98 சதவீதத்திற்கு இடைப்பட்டிருந்தது. | பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் செலவினங்களை மட்டுப்படுத்தப்பட்டமை திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திடமிருந்து கட்டுநிதி விடுவித்தல் நிச்சயமற்றதாக இருந்த காரணத்தினால் செயற் திட்டங்களை செயற்படுத்து வது காலம் தாழ்த்தியமை, சில செயற்திட்டங்களுக்காக திறைசேரி அங்கீகாரம் கிடைக்காததன் காரணமாக நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்ட தாக அறிவிக்கப்பட்டு இருந்தது. | நிதி தேவைப் பாட்டை தீர்மானிக்கும் போது தீர்மானிக்கும் முன்னர் அதற்காக காணப்படும் செயற்படுத்தும் இயலுமையை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். |
| (ஆ) செலவின விடை செலவின விடை இலக்கம் 101-2-06-1409 (8) இன் கீழ் சமய நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான ரூபா 22 மில்லியனில் ரூபா 5 மில்லியன் நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் ஏனைய செலவின விடயங்களுக்காக மாற்றப்பட்டிருந்ததுடன் ரூபா 10.18 மில்லியன் | 2023 ஆம் ஆண்டில் வெசாக் பண்டிகைக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு ரூபா 5 மில்லியன் ஆக இருந்ததுடன் அத்தொகை வெசாக் விழாக்களுக்கு செலவிடுவதற்காக போதியளவு இல்லாததால் சமய நடவடிக்கைகளை மேம்படுத்தும் செலவிட | பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டை குறித்த செயற் பாடுகளை நிறை வேற்றுவதற்காக பயன்படுத்தப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| சேமிக்கப்பட்டு இருந்தது அச்சேம்மிப்பு தேறிய நிதி ஏற்பாட்டின் 60 சதவீதமாக இருந்தது. இதன் பிரகாரம் அமைச்சின் பிரதான செயற்பாடுகளான சமய அலுவல்களை மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட 22 மில்லியனில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்காக ரூபா 6.82 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அது நிதி ஏற்பாட்டின் 31 சதவீதமாக இருந்தது. | விடயத்திலிருந்து அரசின் வெசாக் விழாவின் வெவ்வேறு செலவினங்களை மேற்கொள்வதற்காக ரூபா 5 மில்லியன் தொகை நி.பி 66 மூலம் மாற்றப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது | |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சினால் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசு அச்சீட்டு திணைக்களத்துக்கு ரூபா 3,460,832 கொடுப்பனவு செய்யப்பட்டதாக அத்திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டிருந்த போதும் அதன் சரியான தன்மை தொடர்பாக உறுதிப்படுத்தி அத்தொகையை தீர்வு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | உரிய உறுதிப்படுத்தலை மேற்கொள்ளப்பட்டு காணப்படுவதாகவும் தாமதம் இன்றி கொடுப்பனவுகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | குறித்த கொடுக்கல் வாங்கல் தொடர்பான சரியான தன்மையை உறுதிப்படுத்தி தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக அவ்வப்போது | எதிர்காலத்தில் மீளாய்வொன்றை மேற்கொண்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு குறித்துக்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டிருந்த | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| மீளாய்வினைச் செய்து அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்ய வேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற் கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | DMA/06 மற்றும் 2011.12.23 ஆந் திகதிய ''உள்ளக கட்டுப்பாட்டு கட்டமைப்பு மதிப்பீடு தொடர்பான வழிகாட்டல்'' என்ற தலைப்பில் மற்றும் அதற்குரிய ஏனைய சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறை ஒன்று பேணி செல்லப்படுகின்றது |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டு காண்பிக்கப்படுகின்றன.

**அவதானிப்பு**

| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் உடனான தொடர்பு** | **பெறுமதி**<br>**ரூபா** | **இணக்கமின்மை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவை | | | | |
| (i) | XIX ஆம் அத்தியாயத்தின் 4.4, ஆம் பிரிவு | 361,844 | சேவையில் ஈடுபட்டு மரணித்த 05 உத்தியோகத்தர்களிடமிருந்து 01 முதுல் 20 ஆண்டு காலமாக இருந்து வரும் ரூபா 361,844 ஆன நிலுவை கடன் மீதிகள் அறவிடப்பட்டிருக்க வில்லை. | கலாசார அலுவல்கள் பிரிவின் மரணித்த உத்தியோகத்தர்களின் நிலுவை கடன் மீதிகள் இதற்குரியதாகும். | தாபன விதிக் கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ii) | XIX ஆம் அத்தியாயத்தின் 4.5, 4.6 மற்றும் 6.3 ஆம் பிரிவுகள் | 869,637 | கலாசார அலுவல்கள் பிரிவின் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட 11 உத்தியோகத்தர்களிடமிருந்து 01 ஆண்டு | 09 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவை கடன் மீதிகளுடன் கூடிய கலாசார அலுவல்கள் | தாபன விதிக் கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முதல் 20 வருடங்கள் வரை கால வீச்சில் இருந்து வரும் நிலுவை கடன் மீதிகளின் கூட்டுத் தொகையான ரூபா 666,790 அறவிடப் பட்டிருக்கவில்லை. மேலும் 10-20 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியிலிருந்து ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 128,732 ஆன கடன் மீதியொன்றும் மூன்று ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 01-03 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் காணப்படும் மொத்தம் ரூபா 74,115 ஆன கடன் மீதிகளுடன் ரூபா 202,847 தொகை ஓய்வு பெற்ற உத்தியோ கத்தர் களிடமிருந்து அறவிட வேண்டியதாக காணப்பட்டது. | பிரிவின் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட 11 உத்தியோகத்தர்களிடமிருந்து மாத்திரம் இருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வேண்டும் |
| (ஆ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவ | | | | |
| 104(3) மற்றும் (4) | 367,450 | எழுதுகருவிகள் மற்றும் கார்ட்போர்ட் காணாமல் போனமை தொடர்பாக ஆரம்ப அறிக்கையொன்றும் முழு அறிக்கை ஒன்றும் சமர்ப்பிப்பதற்கும் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து நட்டத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | கருத்து தெரிவிக்கவில்லை | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 1992 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 26/92 இலக்க சுற்றறிக்கை. - | அமைச்சின் புத்தசாசன பிரிவிற்குரிய 16 குழாம் வாகனங்கள் அனைத்திற்கும் அரச இலட்சினை பொறிக்கப்பட்டு இருக்க வில்லை | கருத்து தெரிவிக்க வில்லை | சுற்றறிக்கை களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2.5 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 ஆண்டுகளைக் கடந்த ரூபா 21,106,115 ஒப்பந்தங்களுக்கான 05 பிடிகாசு வைப்புக்கள் தொடர்பாக நிதி பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. காலாவதியான அனைத்து வைப்புகள் தொடர்பாக ஒவ்வொரு அரையாண்டு இறுதியிலும் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான பட்டியல் ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்வைப்புக்கள் வித்யா லங்கார சர்வதேச மாநாட்டு மண்டப நிர்மாணத்திற்காக பொறியியல் சார் செயற்பாடுகள் தொடர்பான மத்திய உசாத்துணை பணியகத்திற்கு செலுத்த வேண்டிய வைப்பாக இருந்ததுடன் நிர்மாணத்திற்குரிய சரிப்படுத்தல்கள் மேற்கொள்ளும் வரை நிறுத்தி வைத்தல்களை விடுவிப்பதை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு அமைச்சின் பொறியியலாளரால் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.6 வங்கி கணக்கினை செயற்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 நவம்பர் 27 ஆம் திகதி மில்லனிய கலாச்சார நிலையத்தின் பெயரில் உள்ள வங்கி கணக்கிற்கு ஒரு தடவையில் ரூபா 400,000 தொகை வைப்புச் செய்யப்பட்டமையால் அத்திகதியில் வங்கி மீதி ரூபா 402,684 ஆக இருந்த போதும் காசேட்டின் பிரகாரம் மீதி ரூபா 18,592 மாத்திரமாக இருந்தமையால், ரூபா 400,000 தொகை கிடைத்த முறை தொடர்பாக எழுத்து மூலம் சான்று காணப்படாமை காரணமாக காசேடு சரியாக பேணி செல்லப்படாதிருந்தமை அவதானிக்கப் பட்டதுடன் 10 சந்தர்ப்பங்களில் ரூபா | குறித்த காலஎல்லைக்குள் நிலைய பொறுப்பு உத்தியோகத்தர் சேவையை விட்டுச் சென்றதால் பரிசோதனைகளுக்கு சமூகமளிக்க செய்ய முடியாமை காரணமாக பரிசோதனை தாமதமாக உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது | காசேடு சரியாக பேணப்பட வேண்டும் |

400,000 தொகை மீண்டும் வங்கி வைப்புக் கணக்கிலிருந்து பெற்றுக் கொள்ளப் பட்டிருந்த போதும் அப்பணம் ஈடுபடுத்தப்பட்ட முறை தொடர்பான தகவல்கள் கணக்காய்வுக்கு தெரியப்படுத்தப்பட வில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் பாத்தியங்கள மனித எலும்புக்கூடு பாதுகாப்பு கூடத்திற்காக வெப்பத்தை கட்டுப்படுத்தும் இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்வதற்காக வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் மூலம் ரூபா 1.2 மில்லியன் ஒதுக்கப்பட்டு 2023 ஆகஸ்ட் மாதம் இறுதி அளவில் இயந்திரத்தை இந்தியாவிலிருந்து கொண்டு வருவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயன் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் இவ் இயந்திரத்திற்குரிய பெறுகை செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. | வெப்ப கட்டுப்பாடு இயந்திரத்தை இந்தியாவில் இருந்து கொண்டு வரும் செயற்பாட்டுக்காக நடவடிக்கை எடுக்க வேண்டிய நிறுவனங்களை கண்டுபிடிப்பதற்கு சிரமமாக இருந்த காரணத்தினால் உரிய திட்டத்தின் பிரகாரம் முடிவுடுத்துவதற்கு முடியாத இருந்தது. எவ்வாறாயினும் தாமதத்தின் காரணமாக தொல்லியல் பாதுகாப்பு செயற்பாட்டுக்கு சீரற்ற தாக்கம் ஒன்று ஏற்பாடுவதை தவிர்ப்பதற்காக தொல்பொருள் மிகவும் பாதுகாப்பாக ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் வைக்கப்பட்டு தற்போது அது கொழும்பு தேசிய நூதனசாலையின் குளிரூட்டப்பட்ட கலரியில் விசேட கண்ணாடி கூடம் ஒன்றினுள் வைப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் வெப்பக் கட்டுப்பாட்டு இயந்திரத்தை பொருத்துவதற்கு உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் குறித்த செயற்திட்டத் தை செயல்படுத்த வேண்டும் |

**3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புத்த சாசன பிரிவின் செயலாற்றல் அறிக்கையில் இணக்க அறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் இணங்கப்படாத 07 தேவைகளை இணங்குவதாக அறிக்கை இடப்பட்டிருந்தது. | ஒரு விடயம் தவிர ஏனைய விடயங்களுக்காக இனக்கமின்மை என்பது ஏற்றுக்கொள்ளப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் செயலாற்றல் அறிக்கை வரைவு தற்போது நான்கு வகையாகப் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டு இருந்தது நாளது வரையாக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | பதில் தவறாகும். செயலாற்றல் அறிக்கையில் சரியான தகவல்கள் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | கலாசார பிரிவின் செயலாற்றல் அறிக்கையில் செயல் முன்னேற்றம் மற்றும் தொலைநோக்கு என்பவற்றின் கீழ் ஒவ்வொரு பிரதேச செயலளார் பிரிவிலும் ஒரு கலாச்சார நிலையம் ஒன்று வீதம் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் முல்லைதீவு மன்னார் மற்றும் கிளிநொச்சி ஆகிய மூன்று மாவட்டங்களில் ஒரு கலாச்சார நிலையம் ஏனும் தாபிக்கப்படாதிருந்ததுடன் அனைத்து நிகழ்ச்சிகளிலும் பௌதீக முன்னேற்றம் 2 சதவீதம் முதல் 38 சதவீதம் வரையும் இருந்த போதும் செயலாற்றல் அறிக்கையில் 53 சதவீதம் முதல் 100 சதவீதம் பௌதீக செயன் முன்னேற்றம் பெற்றுக் கொள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | காணப்படும் அரச செலவின சுற்றறிக்கையின் கீழ் புதிய நிர்மாணங்களுக்காக நிதி ஏற்பாடு வழங்குதல் இடம் பெறாததால் திருத்தவேலைகளை செய்து புதுப்பித்து பயன்பாட்டுக்கு எடுக்கக்கூடிய கட்டிடங்கள் இருந்தால் அது தொடர்பாக மாவட்ட செயலாளர்களுக்கும் பிரதேச செயலாளர்களுக்கும் வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் உரிய மாவட்டங்களில் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் கலாசார நிலையங்களை நிர்மாணிக்க முடியும். குறித்த சுற்றறிக்யை வழங்குவதற்கு முன்னர் நிதி ஏற்பாடு வழங்கப்பட்ட ஓமந்தை, சந்திளிப்பாய், மருதங்கேனி போன்ற கலாசார நிலையங்களினது அனைத்து நிர்மாண் நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டு தற்போது பாடநெறிகள் நடத்திச் செல்லப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | செயலாற்றல் அறிக்கையில் சரியான தகவல்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நடைமுறை அல்லாத சொத்துக்கள் மீதிகள் உள்ளடக்கப்பட்டிருந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 120,100 ஆன மோட்டார் வண்டி ஒன்று 2019 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னரிருந்து மகாநாயக்க வாரிகாராம வளைவில் சிதைவடைந்து இருந்ததுடன் 2022 ஒக்டோபர் 24 ஆம் திகதி இவ்வண்டியை கைதவிர்ப்பதற்காக தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் இதுவரை கைதவிர்க்கப்பட்டு இருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டு இருக்கவில்லை | பயன்பாட்டுக்கு எடுக்க முடியாத மோட்டார் வண்டிகளை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அமைச்சிக்குரிய 02 வாகனங்கள் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்று காணப்பட்டதுடன் திருத்தி பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை | வாகனங்கள் எந்நேரம் நிறுத்தி வைக்கப்படாமல் பயன்படுத்துவதற்கு அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கைகளுக் கு உட்படுத்த வேண்டும். |
| (இ) | 2018 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 03/2018 இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் 2019 மார்ச் 31 இல் உள்ளவாறு அரசிற்கு உரிய வாகனங்களில் பதிவு குறித்து தொடர்பாக சிக்கல்களை தீர்வு செய்யப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்ற 03 வாகனங்களின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வாகனங்களை விரைவில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டு இருந்தது. | வாகனப் பயன்பாடு தொடர்பான சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | கை தவிர்க்கப்பட வேண்டியதாக இனங்காணப்பட்ட கலாச்சார பிரிவிற்குச் சொந்தமான இரண்டு வாகனங்கள் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய பத்திரமுல்லயில் அமைந்துள்ள வாகன தரிப்பிடத்தில் பாதுகாப்பற்ற வகையில் நிறுத்தி | ஒரு வண்டி கலாசார அலுவல்கள் பிரிவின் மூலம் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் அரசின் மதிப்பீட்டின் விலை சமர்ப்பிக்கப்படாமை காரணமாக மீண்டும் | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | வைக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாகனங்கள் தொடர்பாக 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 13.2 ஆம் பந்திக்கு உரிய வழிகாட்டி இலக்கம் 03 இல் குறிப்பிடப்பட்ட நடைமுறையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | குறைந்த பெறுமதிக்கு கைதவிர்ப்பதற்கு எதிர்பார்ப்பதுடன் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திலிருந்து அழைத்து வரப்பட்டு பரீட்சிக்கப்பட்ட பின்னர் வண்டியின் அடிச்சட்டக இலக்கத்தை கண்டுபிடிக்க முடியாமல் இருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (உ) | அமைச்சின் கீழ் நிர்வாகிக்கப்படும் ரஜரட்ட சுற்றுலா விடுதி அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்கள் அமைப்பு என்பவற்றை அரசிற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதியல்லாத சொத்துக்களின் கீழ் எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு குறித்துக் கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. | குறித்த சொத்துக்களை அமைச்சின் கீழ் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | நகர அபிவிருத்தி மற்றும் சமூக காணி அமைச்சினால் 2005 ஆம் ஆண்டின் போது நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டு பகுதி அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 9847 சதுர அடி பரப்பளவிலான வித்தியா லங்கார சர்வதேச மாநாட்டு மண்டபம் 2013 ஆம் ஆண்டின் போது புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 1249.93 மில்லியன் செலவில் வேலை பூர்த்தி செய்யப்பட்டு இருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது வேலை பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கையில் 2019 ஆம் ஆண்டு வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் கட்டிடங்கள் அமைச்சுக்கு கையளித்தல் 2021 ஆம் ஆண்டு வரை தாமதிக்கப்பட்டிருந்தது. கட்டிடங்களின் வேலை பூர்த்தி செய்வதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் தாமதிக்கப்பட்டிருந்த போதும் தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் | தாமதத்துக்கான காரணங்கள் அனைத்தையும் கருத்திற் கொண்டு செயற்திட்டத்தின் தாமதக் கட்டணங்கள் கணக்கிடப்பட்டு நிறுத்தி வைத்தல் மூலம் தாமத கட்டணங்களை அறவிடுவதற்கு கருத்தில் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் கட்டிடங்களை ஆக்கபூர்வமான பொருளாதார நடவடிக்கைக்காக ஈடுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தாமத காலத்திற்காக தாமத கட்டணங்களை அறவிடுவதற்கும் கட்டிடத்தை செயற்திறனான செயற்பாட்டுக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| நிர்மாணத்தில் காணப்பட்ட குறைபாடுடன் கூடிய கட்டிடம் வித்யா லங்கார நம்பிக்கை பொறுப்பு பிரிவிற்கு கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதும் உரிய முறையாக கையேற்றதற்கான எழுத்து மூல உறுதிப்படுத்தல் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த அறிக்கை திகதி வரை கட்டிடம் எவ்வித வினைத்திறனான செயற்பாட்டுக்கும் பயன்படுத்தாமல் விளைவற்று காணப்பட்டது. | | |

### 3.4 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 881 இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி முதல் அல்லது அவ்வாறான பதவி ஒன்றுக்கு மாற்றப்பட்ட திகதி முதல் இரண்டு மாதங்களுக்குள் பிணை வைக்க வேண்டிய போதிலும் புத்தசாசன பிரிவில் பிணைவிக்க வேண்டிய 25 உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | பிணை வைக்க வேண்டிய அரசின் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நாடு பூராகவும் அமைந்துள்ள கலாச்சார மத்திய நிலையங்களின் நிர்வாகம், பராமரிப்பு மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கி கலாச்சார பிரிவினால் செயல்படுத்தப்பட்டிருந்த | தொழிற்சங்க சிக்கல் ஒன்றினால் பகிஷ்கரிப்பில் பங்கு பற்றியதாக தொழிற்சங்கங்களால் அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில் | கலாசார நிறைய நிர்வாகம் பராமரித்தல் மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை |

| | | | |
|---|---|---|---|
| | பிரதான செயற்பாட்டாக இருந்த போதும் அனைத்து இலங்கை கலாசார நிலையங்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களிடம் தொழில்சார் சிக்கல்கள் காரணமாக 2023 பிரதீபா தேசிய போட்டிக்காக தெரிவு செய்யப்பட்டிருந்த 130 நிலையங்களில் 66 நிலையங்களுக்குரிய மாணவர்கள் அதற்காக சமூகமளிக்காது இருந்ததுடன் அது 51 சதவீதமாக இருந்தது. | லை. அவ்வாறான நிலைமை ஒன்றின் பேரில் மாகாண போட்டிகள் முறையாக நடத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட திகதி முதல் அனைத்து அகில இலங்கை போட்டிகளை நடத்துவதற்குரிய சுற்றறிக்கை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முறைப்படி மாகாண போட்டிகளை நடத்தி அகில இலங்கை போட்டிகளை நடாத்த நடவடிக்கை ஒழுங்கு செய்யப்பட்டது. | வழங்குதல் மற்றும் உரிய போட்டிகளை நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் நடாத்துவது முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | கலாசார நிலையத்தின் மாதாந்த பெறுவனவு மற்றும் கொடுப்பனவு உரிய மாதம் முடிவடைந்து அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் ஆராய்ச்சி மேற்பார்வை மற்றும் புலனாய்வு பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் நாட்டில் அமைந்துள்ள 215 கலாச்சார நிலையங்களில் இருந்து 114 நிலையங்கள் அதாவது 53 சதவீதம் மாதாந்த பொழிப்புகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சரி செய்யப்பட்டு வருகின்றது | கலாசார நிலையங்களில் மாதாந்த பெறுவனவு மற்றும் கொடுப்பனவு பொழிப்பிற்குரிய கால எல்லைக்குள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2014 ஜுன் 26 ஆம் திகதிய 5/2014 ஆம் இலக்க கலாச்சார மற்றும் கலை அலுவலர்கள் சுற்றறிக்கையின் 7 பிரிவின் பிரகாரம் கலாசார நிலையங்கள் அபிவிருத்தி சங்கத்தின் கொடுக்கல் வாங்கல்களை பரீட்சிப்பதற்காக கணக்கு பரிசோதகராக அண்மித்த கலாச்சார நிலையம் ஒன்றின் நிலைய பொறப்பு அதிகாரி, கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்லது உதவி கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர் ஆகிய ஆகிய ஒருவரில் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் நியமிக்கப்பட வேண்டியதுடன் அவ்வாறு இல்லாத சந்தர்ப்பங்களில் பிரதேச அரச அல்லது தனியார் நிறுவனம் ஒன்றின் | சரி செய்யப்பட்டு வருகின்றது | சுற்றறிக்கையின் பிரகாரம் கலாசார நிலையங்களுக்கு கணக்கு பரிசோதகர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | துறைக்குரிய உத்தியோகத்தர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வு திகதியான 2024 பெப்ரவரி 28 ஆம் திகதி வரை கலாசார நிலையத்திற்கு கணக்குப் பரிசோதகர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை | | |
| (ஈ) | மேற்படி சுற்றறிக்கையின் 16 ஆம் உப பிரிவின் பிரகாரம் நிலையத்தின் அபிவிருத்தி சங்கத்தினால் செயற்குழு கூட்டங்கள் நடாத்தப்படாத இருந்ததுடன் 20 ஆம் உப பிரிவின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவினம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அது தொடர்பாக அமைச்சினால் எவ்வித நடவடிக்கை எடுக்காமல் காரணமாக வருமானத்தை சேகரித்தல் மற்றும் செலவினங்களை கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு இன்றி நிலைய பொறுப்பு உத்தியோகத்தரின் விருப்பின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | புதிய நிலைய பொறுப்பு அதிகாரி ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன் செயற் குழு கூட்டமும் நடத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் கலாசார நிலையங்களில் செயற்குழு கூட்டங்களை நடத்துவதற்கும் வருமானம் மற்றும் செலவினங்கள் தொடர்பாக நடவடிக்கைகளை எடுத்தலும் வேண்டும். |
| (உ) | கட்டிடங்கள் மற்றும் ஏனைய வசதிகளுடன் மிகவும் செயற்திறனான வகையில் வருமானத்தை உழைக்கக்கூடிய செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தும் இயலுமை காணப்படுகின்ற அபேகம வளவில் வர்த்தக ரீதியிலான நடத்தக்கூடிய நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை மேற்கொள்ளும் இயலுமை இல்லாததால் வர்த்தக நோக்கில் நடத்திச் செல்லப்படுகின்ற வியாபாரம் ஒன்றுடன் இணைக்கப்பட்டு அல்லது முதலீடு செய்யும் செயல் திட்டம் ஒன்றாக நடத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென 2021 நவம்பர் 02 ஆம் திகதிய அமப/21/1883/ 305/007-1 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் வெளியிடப்பட்டிருந்த போதும் 02 ஆண்டு காலம் கடந்திருக்கையில் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் | ப்போது முதல் பணத்தை உழைப்பதற்காக முகாமைத்துவ மற்றும் நிதி நடைமுறை ஒன்று உள்ளடக்கப்பட்டு வியாபார திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அதனை செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தொற்று நிலைமை காரணமாக பார்வையாளர்களுக்காக மூடப்பட்டிருந்த அபேகம 2022 ஆம் ஆண்டில் இ இறுதி பகுதி வரை காணப்பட்டன. அக்காலப்பகுதியில் வளவில் பராமரிப்பு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ள முடியாது இருந்ததால் | அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் அபேகம வளவின் வருமானத்தை உழைக்கும் செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்துவதற்கும் உயர்ந்த பயன்பாடுடன் ஈடுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஓராண்டுக்கு மேற்பட்ட காலமாக இழக்கப்பட்டிருந்த பார்வையாளர்களுக்கான டிக்கட் விற்பனை வருமான்தை உழைப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்காமையால் வளவின் உள்ள கட்டிடங்களில் மாதிரி மற்றும் மனித உருவங்கள் அழிவடைந்து காணப்பட்டமை 46 வியாபாரக்கூடங்களில் 25 கூடங்கள் உற்பத்தி விநியோகத்தர்கள் இல்லாமையால் குறை பயன்பாடுடன் காணப்பட்டமை போன்ற விடயங்களின் பிரகாரம் அபேகம வளவு குறைப்பயன்பாட்டில் காணப்பட்டது | வளவில் அநேகமான பார்வையிடப்படும் இடங்கள் இயற்கை காரணங்கள் நிலைமை காரணமாக அழிவடைந்து இருந்தது. | |
| (ஊ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதி 01/202 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிறுவனங்களால் வழங்கப்படுகின்ற சேவைகளுக்காக அறவிடப்படும் கட்டணங்கள் மீளாய்வு செய்யப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை 15 சதவீதம் ஆகக்கூடிய எல்லைக்கு உட்பட்டு கட்டணங்கள் திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும் அபேகம வளைவில் வியாபாரக் கூடங்களுக்காக அறவிடப்பட்ட கட்டணங்கள் அவ்வாறு திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | வியாபாரக் கூடங்களுக்கு கட்டணங்களில் திருத்தம் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வியாபாரக் கூடங்களை பராமரிப்பதற்கு செலவினம் வியாபாரக் கூடத்தின் அளவு மற்றும் அதற்காக வழங்கப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகள் அடிப்படையில் மாதாந்த கட்டணம் ஒன்றை அறவிடுவதற்கும் அதற்குரிய இரு தரப்பினர் உடன்படிக்கையின் பேரில் வியாபாரக் கூடங்களை வழங்குவதற்கும் கவனம் செலுத்தி அந்நடவடிக்கையும் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு தீர்மானத்தை மேற்கொள்வதற்காக அமைச்சின் உத்தியோகத்தர்கள் மூன்று பேருடன் கூடிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழுவின் பரிந்துரையின் பிரகாரம் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும் |

குறித்த கட்டண அதிகரிப்பு 15 சதவீதத்துக்கு மேற்பட்டிருந்ததால் அங்கீகாரம் வழங்குவதற்காக நிதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது